SC. No.34/2025

நாள் :– 07.04.2026

அ.சா. 1:–லதாமகேஷ்வரி

(2, 3, 8 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. பி.என்.எஸ்.எஸ். சட்டப்பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது) மற்ற எதிரிகள் ஆஜர். சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முன்னிலையானார். சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

சம்பவம் நடந்த இடமானது மேல மாப்படுகையில் குடியான தெரு ஆகும். அங்கு தான் நான் வசித்து வருகிறேன். நான் தனிப்புகார் கொடுத்த மனுவில் முதல் விசாரணை சொன்ன அனைத்து சந்திகளையும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் தனிபுகாரில் சொன்ன சங்கதிகள் குறித்து நேரடியாக தெரியாது. எனது மகன் விமல்ராஜ், எனது அம்மா விசாலாட்சி சொல்லி தான் எனக்கு தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று நான் திருச்சி மத்திய சிறையில் கொலை வழக்கு சம்மந்தமாக சிறையில் இருந்தேன். எனது மகனும், எனது கணவரும், நானும் அரவிந்த் என்ற நபர் கொலை வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதாக வழக்கு பதிவு செய்து, நானும் எனது கணவரும் சிறையில் இருந்தோம். எனது மகன் இளவர் என்பதால் அப்போதே விட்டுவிட்டு வழக்கு மட்டும் நடைபெற்றது. எனது இளைய மகன் விமல்ராஜ் மட்டும் நாங்கள் சிறையில் இருந்தபோது பக்கத்து வீடான காமராஜ் என்பவர் வீட்டில் இருந்தான். எனது அம்மா நாங்கள் சிறையில் இருந்தபோது வடகரையில் இருந்த அவர் வீட்டில் இருந்தார். எனது அம்மா எனது வீட்டை சூறையாடும் போது நேரடியாக பார்த்தார்கள். எனது அம்மா புகார் கொடுத்ததாக சொல்வதை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் இந்நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் எனது அம்மாவால் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. எனது அம்மா கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.427/2015 பதிவு செய்யப்பட்டுள்ளது. எனது அம்மா கொடுத்த புகாரின் பேரில் பதிவு

CJM, MAYILADUTHURAI.

M.லதாமகேஸ்வரி

செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் பெயர் விலாசம் தெரியாத மேல் மாப்படுகையை சேர்ந்த 5 நபர்கள் தான் என்று எனது அம்மா புகார் கொடுத்துள்ளார் என்றால் அது சரியல்ல. அவர் பெயர் சொல்லி தான் கொடுத்தார். சிவபிரகாசம், பாஸ்கர், குணசேகர், காயத்ரி, காவேரி, தையல்நாயகி என்று எனது அம்மா என்னிடம் சொன்னார். மற்றவர்களின் பெயரை எனது அம்மாவிடம் தான் கேட்கவேண்டும். எனது அம்மா நான் சொல்வது போல் யார் பெயரையும் சொல்லவில்லை என்றும், பெயர் விலசாம் தெரியாத மேல் மாப்படுகையை சேர்ந்த 5 பேர் என்று புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல. எனது அம்மா உண்மையிலேயே இந்த சம்பவம் நடந்ததாக பார்த்திருந்தால் தான் கொடுத்த புகாரிலேயே பெயர் விலாசம் சொல்லியிருப்பார் என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மாவே தான் கொடுத்த புகாரில் 5 பேர் தான் என்று சொல்லியுள்ள நிலையில் ஏற்கனவே என்மீது, என் கணவர், எனது மகன் மீது எதிரி பாஸ்கர் கடையில் வேலைசெய்த அரவிந்தன் கொலை சம்மந்தமாக புகார் கொடுத்ததின் காழ்புணர்ச்சி காரணமாக ஒரு பொய்யான தனிப்புகாரை நான் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மா கொடுத்த புகாரை நான் பார்க்கவே இல்லை. விசாரிக்கவில்லை என்பது தான் என்னுடைய குற்றச்சாட்டு. விசாரிக்காமல் இருந்ததற்காக காவல் கண்காணிப்பாளிடமோ அல்லது மற்ற உயர் அதிகாரிகளிடமோ மனு எதுவும் கொடுக்கவில்லை. 3 மாதத்திற்குள்ளாக நான் தனிப்புகார் கொடுத்துவிட்டேன். தனிப்புகார் கொடுக்கும்போது எனது அம்மா கொடுத்த புகாரையோ அல்லது போலீசார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையோ நான் தாக்கல் செய்யவில்லை. நான் கொடுத்த தனிப்புகாரில் நான், ஜனார்தனன், செல்வராஜ், விமல்ராஜ், கௌசல்யா, ரவீந்தர் ஆகியோரை விசாரித்தேன். மேற்சொன்ன நபர்கள் அனைவரும் எனது கணவரின் நண்பர்கள். இவர்கள் அனைவரும் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்று எனது அம்மா என்னிடம் சொல்லவில்லை. அந்த சாட்சிகளே என்னிடம் வந்து சொன்னார்கள். தனிப்புகாரின் போது எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் என்னை குறுக்கு விசாரணை செய்யவில்லை. சேதாரம் ஆனதாக சொல்லும் பட்சத்தில் ஆய்வு

CJM, MAYILADUTHURAI.

M. லதா மகேஸ்வரி

நிபுணர்களை வைத்து சேதார தன்மையை கணக்கிட்டு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஏற்கனவே சேதாரமான கூரை வீட்டை புகைப்படமாக தாக்கல் செய்த எதிரிகள் மீது காழ்புணர்ச்சி கொண்டு இந்த தனிப்புகரை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு கோப்புகளில் உள்ள புகைப்படத்தில் உள்ள கார் பதிவெண் தெரியவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த கார் எனது கணவருடைய நண்பர் உடையது. அந்த காரை நேராக நிறுத்தி புகைப்படம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எங்கேயோ இருந்த காரை புகைப்படமாக எடுத்து தன்னுடைய கார்தான் சேதாரம் அடைந்ததாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு கோப்புகளில் உள்ள சிவசக்தி எங்களுடைய வீடுதான். அந்த வீட்டின் மேற்கூரை நல்ல நிலையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த புகைப்படத்தில் உள்ள மேற்கூரை பகுதி வாசப்படி பகுதி ஆகும். எனது வீட்டின் உடைய முழு புகைப்படம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வீட்டில் இருந்து எதுவும் களவு போகவில்லை என்றும், அதனால் தான் வாசல்பகுதி கூரைகள் சேதம் அடையாமல் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன எந்த சங்கதியையும் என்னுடைய தனிப்புகாரில் சொல்லமால் தற்போது வழக்கிறக்காக புது புது சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றும், இந்த வழக்கே நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தனிப்புகார் தாக்கல் செய்தபோது நான் தாக்கல் செய்த புகைப்படங்கள் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றும், அது இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சி.டி அல்லது இரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். கார் சேதாரமானதாக சொல்லும் பட்சத்தில் அந்த காரின் பதிவு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அம்மா போலீசாரிடம் கொடுத்த புகாரில் எதிரிகள் பேர் ஒருவரையும் சொல்லவில்லை என்றும், ராமமூர்த்தி என்பவர் மட்டும் பொய் புகாருக்கு பயந்து முன் ஜாமீன் எடுத்தார் என்றும், நான் கொடுத்த தனிப்புகாரே சட்டத்திற்கு முரணானது என்பதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால்

CJM, MAYILADUTHURAI.

M, லதா மகேஸ்வரி

சரியல்ல. போலீசார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையிலும் எதிரிகள் ஒருவர் பேர் இடபெறவில்லை என்று சொன்னால், ஆனால் எனது அம்மா பெயர் சொல்லிதான் புகார் கொடுத்தார். எனது அம்மா கொடுத்த புகாரில் நேரடியாக சம்பவத்தை பார்த்ததாக சொல்லவில்லை என்றும், மதியம் 2.00 மணிக்கு வீட்டிற்கு வந்து பார்த்தபோதுதான் சேதாரம் குறித்து தெரியவந்தது என்று சொன்னால் எனது அம்மா பார்த்ததாகத்தான் சொல்லியுள்ளார். சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றும், எதிரிகள் மீது காழ்புணர்ச்சி கொண்டு கொடுக்கப்பட்ட தனிப்புகார் என்றால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவம் ஏதாவது நடைபெற்றிருந்தால் போலீசார் வழக்கு பதிவு செய்ததை விசாரணை செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்திருப்பார்கள் என்று சொன்னால் அவர்கள் விசாரிக்காததால் தான் நான் தனிப்புகார் கொடுத்தேன்.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

M. லதாமகேஸ்வரி

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.